# 11. குடிநீர்

ஊரக குடிநீர் திட்டம் முன்னுரிமை பெற்றதொரு திட்டமாகும். இதனடிப்படையில் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் குடிப்பதற்கு, குளிப்பதற்கு மற்றும் துவைப்பதற்கு தேவையான நீராதாரங்கள் உருவாக்குதல் மற்றும்

பராமரிக்கும் பொறுப்புகளை உள்ளாட்சி அமைப்புகளின் தலையாய கடமைகளாக வகை செய்யப்பட்டுள்ளது. இந்த பொறுப்புகளை திறம்படி செவ்வனே செயலாற்ற ஆரசு ஆணை(நிலை)எண்.75, ஊரக வளர்ச்சி துறை நாள் 14.3.97 –ல் (அ) கைம்பம்புகள் , கிணறுகள், ஊரணிகள், மேல்நிலைத் தொட்டிகள் உட்பட கிராம குடிநீர் வழங்கும் திட்டங்களையும் அதற்கான இடங்களையும் கண்டறிய உதவுதல் மற்றும் சுத்தமான குடிநீர் விநியோகம் மற்றும் நீரின் தரத்தை சோதித்தல் போன்ற பொறுப்புக்களை கிராம ஊராட்சிகளுக்கும் (ஆ) கிராமங்களுக்கான குடிநீர் திட்டங்களை கண்டறிதல் மற்றும் முன்னுரிமை அளித்தல், திட்டங்களின் தரம் மற்றும் முன்னேற்றத்தினை மேலாண்மை செய்தல் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள குடிநீர் வழங்கு திட்டங்களை பராமரித்தல் மற்றும் எங்கெல்லாம் இயலுமோ அங்கெல்லாம் தண்ணீர் கட்டணங்களை நிர்ணயித்தல் போன்ற பொறுப்புக்களை ஊராட்சி ஒன்றியங்களுக்கும் (இ) பெரிய குடிநீர் திட்டங்களை உருவாக்கல் போன்ற பொறுப்பை மாவட்ட ஊராட்சிக்கும் வழங்கி அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இப்பொருள் குறித்து ஊராட்சி அமைப்புகளுக்கு மேலும் பொறுப்புகளை வழங்க ஆராய்ந்து குழு கீழ்கண்ட பரிந்துரைகளைச் செய்கின்றது.

## கிராம ஊராட்சிகள்

1. கிராம ஊராட்சி மற்றும் அரசினால் குடிநீர் வழங்குதல் மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களை உருவாக்கி, அத்திட்டங்கள செவ்வனே மேற்கொண்டு தங்கள் பகுதிகளுக்கு முறையாக குடிநீர் வழங்க உறுதிசெய்தல்.

2. கிராம ஊராட்சி செயல்படுத்தும் குடிநீர்த்திட்டங்களை கண்காணித்து மேற்பார்வையிட்டு திட்ட முன்னேற்றம் குறித்த அறிக்கையினை அளித்தல், மற்றும் குடிநீர் திட்டங்களின் செயலாக்கத்தினை மேற்பார்வையிடுதல்.

3. குடிநீர்த்திட்டங்களை செம்மையக செயல்படுத்த பராமரிப்புப் பணிகள் மற்றும் சிறப்பாக இயக்குவதற்கு பணியாளர்களை அமர்த்துதல்.

4. தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் ஊரக உறைவிடங்கள் உள்ளடங்காத பகுதிகளுக்கு ஊரக நீர் வழங்கும் திட்டத்தின் செயல்பாட்டினை மேற்பார்வை செய்தல்.

5. தமிழ்நாடு வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நீர் வழங்கும் பகுதிகளின் செயல்பாட்டினை மேற்பார்வை செய்தல்.

6. வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கான ஊராட்சி ஒன்றிய நலத் திட்டங்களின் செயல்பாட்டினை மேற்பார்வையிடுதல்.

7. மிகுதியாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் குழாய் மூலம் நீர் வழங்கும் முனைப்பு திட்டங்களின் செயல்பாட்டினை மேற்பார்வையிடுதல்.

8. குறைந்தபட்ச தேவைகள் திட்டத்தின் கீழ் உவர்நீரினால் ஏற்படும் பாதிப்புகளை முனைப்பாக கட்டுப்படுத்தி உப்புத் தன்மையால் வெகுவாகப்பாதிக்கப்பட்ட உறைவிடங்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுவதை மேற்பார்வை செய்தல் .

9. குடிநீரின் உப்புத்தன்மையை அகற்றிட இயந்திரங்களை பயன்படுத்தும் திட்டத்தின் செயல்பாட்டினை மேற்பார்வை செய்திடல்.

10. ஊரகப்பகுதிகளுக்கான சிறப்பு நீர் வழங்கும் திட்டங்கள் சரியான முறையில் செயல்படுகிறதா என்பதனை மேற்பார்வையிடுதல்.

11. விரைவான ஊரக நீர் வழங்கும் திட்டத்தின் செயல்பாடுகளை மேற்பார்வை செய்திடல்.

12. ஒன்றுக்கு மேற்பட்ட கிராம ஊராட்சிகளுக்கு குடிநீர் வழங்கும் சிறிய கூட்டு குடிநீர் திட்டங்களை செயலாக்குதல், பராமரித்தல் மற்றும் குடிநீர் கட்டணங்களை வசூலித்தல் போன்ற பணிகளை கிராம ஊராட்சிகளில் கூட்டிணைவுக் குழுவிடம் குடிநீர் வடிகால் வாரியம் ஒப்படைத்தல்.

## ஊராட்சி ஒன்றியங்கள்

1. குடிநீர் வழங்குவதற்கன வசதிவாய்ப்புகள் மற்றும் அவற்றினை மேம்பாடு செய்வதற்கான திட்டங்களை தீட்டுதல். அவ்வாறு மேற்கொள்ளப்படவிருக்கும்

அல்லது மேற்கொள்ளும் திட்டங்களுக்கு தொழில் நுட்ப வசதி மற்றும் நிர்வாக நிதி ஏற்பு செய்தல்.

2. கூட்டு குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு தேவையான தொழில் நுட்ப உதவியினை வழங்கி ஒருங்கிணைந்து செயல்படுத்துதல்.

3. ஊராட்சி ஒன்றிய அளவில் குடிநீர் சுத்திகரிப்புக்கான இடு பொருட்களை வழங்குதல்.

4. ஒன்றிய அளவிலான ஊரக குடிநீர் திட்டங்கள் சிறப்பான முறையில் செயல்படுகின்றனவா என்பதனை மேற்பார்வையிடல் மற்றும் அப்பணிகளின் முன்னேற்றம், தரம் ஆகியவற்றை கண்காணித்தல்.

5. ஒன்றியப் பகுதிகளில் உள்ள குடிநீர் அமைப்புகளைப் பராமரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுத்தல்.

6. மேலும், ஒன்றுக்கு மேற்பட்ட ஊராட்கிளுக்கான திட்டங்களின்குடிநீர்க் கட்டணத்தை ஊராட்சிகள் மூலமாக வசூலித்தல்.

7. தமிழ்நாடு வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் பணிகளின் நீர் வழங்கு பகுதிகளின் செயல்பாடுகளை மேற்பார்வையிட்டு கண்காணித்து மேற்கொண்டு சிறப்பாக செயல்படத் தேவையான ஆலோசனைகளை வழங்கல் .

8. வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தனிக்கவனம் செலுத்தி ஊராட்சி ஒன்றிய குடிநீர் நலப்பணிகள் சரியாக செயல்படுகின்றனவா என்று மேற்பார்வையிடல்.

9. மிகையாகப்பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு குழாய் மூலம் நீர் வழங்கு முனைப்பு திட்டத்தினை செயல்படுத்தி அதன் செயல்பாடு சரியன முறையில் உள்ளதா என்பதை மேற்பார்வையிடல்.

10. தன்னிறைவுத்திட்டம், ஊரக உறைவிடங்கள உள்ளடங்காத பகுதிக்கான ஊரக குடிநீர் வழங்கும் திட்டத்தினை தங்கள் ஒன்றிய பகுதிகளில் செயல்படுத்தி அவை சரியான முறையில் செயல்படுகின்றனவா என்பதனை மேற்பார்வையிடல் .

11. குறைந்தபட்ச தேவைகள் திட்டத்தின்கீழ் உவர்நீரினை மிக முனைப்பாக கட்டுப்படுத்துதல் மற்றும் உப்புத்தன்மையால் வெகுவாகப் பாதிக்கப்பட்ட உறைவிடங்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டங்களை செயல்படுத்தி அவ்வாறு செயல்படுத்தப்படும் திட்டங்களை மேற்பார்வையிடல் .

12. ஒன்றியப் பகுதிகளில் உப்புத்தன்மையால் பாதிக்கப்பட்ட தண்ணீரை இயந்திரங்கள் மூலம் சுத்தப்படுத்தி உப்புதன்மையை அகற்றி விரைவாக குடிநீர் வழங்க செயல்திட்டங்கள் செயல்படுத்தி அவற்றினை சிறப்பாக செயல்படுத்துதலை மேற்பார்வையிடல்.

13. ஊரகப்பகுதிளில் சிறப்பு நீர் வழங்கு திட்டங்களை செயல்படுத்தி அவற்றின் செயல்பாடுகளை மேற்பார்வை செய்தல் அவசியம்.

14.விரைவாக ஊரக நீர் வழங்கும் திட்டத்தினை செயல்படுத்தி அவற்றின் செயல்பாட்டினை மேற்பார்வையிடுதல்.

## மாவட்ட ஊராட்சிகள்

1. மாவட்டத்தில் குடிநீர் வழங்கும் திட்டங்கள் அவற்றின் செயல்பாடுகள்மற்றும் மேம்பாடு குறித்து மேற்பார்வையிடுதல் மற்றும் முழுமையான குடிநீர்த்திட்டங்களைக் கண்காணித்தல்.

2. தன்னிறைவுத்திட்டம், ஊரக உறைவிடங்கள் உள்ளடங்காத பகுதிக்கான ஊரக நீர் வழங்கு திட்டங்கள் தொடர்பாக திட்டமிடுதல் ஆலோசனை வழங்குதல் மற்றும் மேற்பார்வையிடுதல்.

3. தமிழ்நாடு வேளாண் வளர்ச்சித்திட்டத்தின் கீழ் நீர் வழங்கும் பகுதிகள் தொடர்பாக திட்டமிட்டு, ஆலோசனைகள் வழங்கி அத்திட்டங்களின்

செயல்பாடுகள் திருப்திகரமாக உள்ளதா என்பதனை மேற்பார்வையிடுதல்.

4. வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு ஊராட்சி ஒன்றிய நலன்கள் குடிநீர் தொடர்பாக கிடைக்க ஆலோசனை வழங்கி மேற்பார்வையிடுதல்.

5. மிகையாகப்பாதிக்கப்பட்ட பகுதிகளில் குழாய் மூலம் நீர் வழங்கு முனைப்பு திட்டத்திற்கான திட்டங்களுக்கு திட்ட ஆலோசனை மற்றும் அவற்றின் செயல்பாடுகள மேற்பார்வை செய்தல்.

6. குறைந்தபட்ச தேவைகள் திட்டத்தின்கீழ் உவர் நீரால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அவற்றை கட்டுப்படுத்தி உப்புத்தன்மையால் வெகுவாகப் பாதிக்கப்பட்ட உறைவிடங்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க திட்டமிட்டு, அவற்றுக்கான ஆலோசனை வழங்கி இத்திட்டங்களின் செயல்பாடுகள் மேற்பார்வையிடல்.

7. உப்புத்தன்மையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உப்புத் தன்மையை அகற்றிட விரைவாக குடிநீர் வழங்கும் செயல்திட்டத்தினை தீட்டுதல், ஆலோசனை வழங்குதல் மேலும் அத்திட்டத்தின் செயல்பாட்டினை மேற்பார்வையிடுதல் அவசியம்.

8. மாவட்டத்தின் ஊரகப்பகுதிகளில் சிறப்புநீர் வழங்கு திட்டம், விரைவான ஊரக நீர் வழங்கு திட்டம் ஆகியவற்றிற்கான திட்டங்கள் தீட்டுதல், திட்டங்களின் செயல்பாடுகளை மேற்பார்வையிடுதல் அவசியம்.

9. பொதுவாக கூட்டு குடிநீர் திட்டத்திற்கு மாவட்ட ஊராட்கிள் திட்டமிட்டு, அவற்றை செயல்படுத்தி மேலும் இத்திட்டத்தை பராமரிக்க தொழில்நுட்ப அமைத்திட வேண்டும்.